RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை மலர்-5 இதழ்- 41 பிப்ரவரி.17 2026 செவ்வாய்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5







# உரிமைத் தொகைத் திட்டத்தால் மகளிர் மகிழ்ச்சி முடக்க நினைத்தவர்களுக்கு அதிர்ச்சி!

திருச்சி: பிப்.17-

"மகளிர் உரிமைத் தொகையாக ரூ.5,000 பெற்ற பெண்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை முடக்க நினைத்தவர்கள் அதிர்ச்சியில் உள்ளனர்," என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டம், லால்குடி நகராட்சியில் ரூ.31.89 கோடி ஓடிமதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் மற்றும் ரூ.4.69 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நகராட்சி அலுவலக கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது. தமிழக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புதிய பேருந்து நிலையம், நகராட்சி அலுவலகம் ஆகியவற்றை திறந்து வைத்து பேசியதாவது: லால்குடி நகரத்தில் புதிய பேருந்து நிலையம், நகராட்சி அலுவலகம் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். திருச்சி மாவட்டத்தில் திருச்சி மாநகராட்சிக்கு அடுத்தப்படியாக வேகமாக வளர்ந்து வரும் ஊர் லால்குடி தான்.




தமிழுக்காக தலைவர் கலைஞர் ரயில் தண்டவாளத்தில் தலைவைத்து படுத்த கல்லக்குடி இருப்பது லால்குடி பகுதி என்பதில் பெருமை கொள்கிறேன். திமுக ஆட்சிக்கு 3 அமைச்சர்களை தந்த ஊர் லால்குடி. தலைவர் கலைஞருக்கு நெருக்கமானவர் அன்பில் தர்மலிங்கம், முதல்வர் ஸ்டாலினுக்கு நெருக்கமான அமைச்சர் கே.என்.நேரு, எனக்கு பக்கபலமாக இருக்கும் அன்பில் மகேஸ் ஆகியோர் லால்குடியைச் சேர்ந்தவர்கள்.

இன்று நகராட்சி நிர்வாகம், பள்ளிக்கல்வித்துறை ஆகிய 2 முக்கிய துறைகளுக்கு அமைச்சர்கள் தந்தது லால்குடி தான். அவர்கள் இருவரும் திருச்சி மாவட்ட வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் முதல்வரிடம் கேட்டுப் பெறுகின்றனர்.

அதேபோல எம்எல்ஏ சவுந்தரபாண்டியனும் இந்தப்பகுதிக்காக பாடுபடுகிறார். திருச்சி பஞ்சப்பூரில் மிகப்பெரிய பேருந்து முனையம் கட்டிய நேரு அவரது சொந்த ஊரில் பேருந்து கட்டமால் விடுவாரா? முதல்வரிடம் தெரிவித்து பேருந்து நிலையம் மட்டுமின்றி நகராட்சி அலுவலகமும் கொண்டு வந்துள்ளார்.

லால்குடி மட்டுமல்ல தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் முதல்வர் பல்வேறு திட்டங்களை நடைமுப்படுத்தி வருகிறார். மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1.31 கோடி மகளிருக்கு மாதம் ரூ.1,000 வழங்கி வந்தார். இந்தத்திட்டத்தை தேர்தலுக்குள் எப்படியாவது நிறுத்தி விட வேண்டும் என சிலர் சூழ்ச்சி செய்தனர். ஆனால் முதல்வர் ஸ்டாலின், என் மக்களுக்கு நான் கொடுத்த ஆயிரம் ரூபாயை நிறுத்த முயற்சித்தால் நான் ரூ.5,000 தருவேன்' என்று, பிப்., மார்ச், ஏப்ரல் ஆகிய 3 மாதங்கள் சேர்த்து ரூ.3,000 கோடை கால சிறப்புத் தொகையாக ரூ.2,000 என ரூ.5,000 வழங்கி உள்ளார்.

மீண்டும் திமுக ஆட்சி அமைந்ததும் மகளிருக்கான உரிமைத் தொகை ரூ.2,000 உயர்த்தி தருவேன் என முதல்வர் வாக்குறுதி அளித்துள்ளார். முதல்வர் அளித்த வாக்குறுதியை செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கை உங்களிடம் உள்ளது. இன்று தமிழ்நாடு மக்கள் குறிப்பாக மகளிர் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளனர்.

இந்தத்திட்டத்தை முடக்க நினைத்தவர்கள் அதிர்ச்சியில் உள்ளனர். இந்தத்திட்டங்கள் மட்டுமின்றி லால்குடிக்கு ரூ.250 கோடியில் லால்குடி புள்ளம்பாடியில் கூட்டுக்குடிநீர் திட்டம், ரூ.51 கோடியில் லால்குடி அரசு மருத்துவமனைக்கு 12 அறைகள் கொண்ட புதிய கட்டிடம், ரூ.5 கோடியில் லால்குடி வட்டாட்சியர் அலுவலகம், ரூ.3 கோடியில் கால்நடை மருந்தகங்கள், ரூ.8 கோடியில் லால்குடி அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகைகள் கொண்ட புதிய கட்டடம், ரூ.4 கோடியில் லால்குடி புள்ளம்பாடி சார்பதிவாளர் புதிய அலுவலகம், தொகுதி முழுவதும் ரூ.7 கோடியில் பல்வேறு பள்ளிகளுக்கு கட்டிடம் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

லால்குடி பகுதிக்கு தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்த இந்த அரசுக்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும். புதிய பேருந்து நிலையத்தை சிறப்பாக, சுத்தமாக, சுகாதாரமாக பராமரிக்க நகராட்சிக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றார்.

## "மீனவர்கள் பிரச்சினையில் தமிழக அரசு உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" விஜய்

சென்னை: பிப்.17-

"மீனவர்கள் பிரச்சினையில் தமிழக அரசு உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாம் கடிதம் எழுதுவதே போதும் என்று தமிழக முதல்வர் எண்ணுகிறாரா?" என தவெக தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "புதுச்சேரியின் காரைக்கால் மாவட்டம், காசாக்குடிமேடு, கிளிஞ்சல்மேடு கிராமங்களைச் சேர்ந்த 25 மீனவர்களை, எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது. அத்துடன், அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது.

இந்த அடாத செயல், அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் 25 பேரையும் உடனடியாக விடுவித்து, அவர்களது படகுகளையும் மீட்டுத் தர ஒன்றிய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே நேரத்தில், இலங்கை நீதிமன்றத்தால் கடந்த 3ம் தேதி விடுவிக்கப்பட்ட பிறகும் தமிழ்நாட்டு மீனவர்கள் 9 பேர், சொந்த ஊருக்குத் திரும்ப முடியவில்லை. அவர்கள் அங்கே பரிதவித்து வருவதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளது வேதனை அளிக்கிறது. மேலும் தமிழக மீனவர்கள் 3 பேர், இலங்கை நீதிமன்றம் விதித்த அபராதத் தொகையைச் செலுத்த முடியாமல் சிறையில் வாடுகின்றனர்.

மீனவர்களுக்குத் தொடர்ந்து இதுபோல நிகழ்வதைத் தடுக்க, தமிழக அரசு உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாம் கடிதம் எழுதுவதே போதும் என்று தமிழக முதல்வர் எண்ணுகிறாரா? இது ஒரு புரியாத புதிராகவே இருக்கிறது.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த மீனவர்கள் அனைவரையும் உரிய முறையில் மீட்டு, சொந்த ஊருக்கு அழைத்து வர வேண்டும்.

மனிதாபிமான முறையில் இலங்கை அரசிடம் பேசி, தாமதமின்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாக, சம்பந்தப்பட்ட மாநில அரசுகள், ஒன்றிய அரசை உண்மையாகவே உணர்வுப்பூர்வமாக வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று விஜய் தெரிவித்துள்ளார்.

## "மீனவர்கள் பிரச்சினை பற்றி அமித் ஷா பேசாதது ஏன்?" வைத்திலிங்கம் எம்.பி

புதுச்சேரி: பிப்.17-

காங்கிரஸ் மாநிலத் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "புதுச்சேரியில் கடந்த 21ம் தேதி முதல் புதுவையில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் என்ஆர்.காங்கிரஸ், பாஜக அரசை கண்டித்து பாதயாத்திரை நடந்தது. நாளை புதுவை ராஜீவ் காந்தி சிலையில் தொடங்கி நேருவீதி பெரிய மார்க்கெட் வரை பாதயாத்திரை நடக்கிறது. இந்த பாதயாத்திரையில் அகில இந்திய காங்கிரஸ் பொது செயலாளரும், ராகுல் காந்தியின் ஆலோசகருமான கே.சி.வேணுகோபால் எம்பி பங்கேற்கிறார். அவர் பாதயாத்திரையை நிறைவு செய்து பேசுகிறார்.

மாஹேயில் 24ல் பாதயாத்திரையும், அடுத்தக்கட்டமாக காரைக்கால், ஏனாமில் நடக்கும். அமித் ஷா மீனவர்கள் பற்றி காரைக்காலில் ஏதும் பேசவில்லை. இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்த படகுகளை மீட்பது பற்றிகூட பேசவில்லை.

போலி மருந்து நபர் வழக்கில் ரூ.10 ஆயிரம் கோடி ஊழல் நடந்துள்ளது. தற்போது காங்கிரஸ் ஆட்சியில் ரூ.15 ஆயிரம் கோடி ஊழல் நடந்துள்ளது என சொல்லும் அமித் ஷா ஏன் ஐந்து ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கவில்லை. மாநில அந்தஸ்து தராவிட்டால் தேர்தலை புறக்கணிப்பதாக கூறிய ரங்கசாமி, அதை அமித் ஷாவிடம் பேசாமல் கூட்டணி தொடர்கிறது.

நாராயணசாமி ஆட்சி நன்றாக இருக்கிறது என்று சொல்லும் நிலையில்தான் அமித் ஷா உள்ளார். 30 நாட்களுக்குள் ரூ.15 ஆயிரம் கோடி ஊழல் தொடர்பாக ஆதாரம் காட்டுங்கள், இல்லாவிட்டால் ஒரு கோடி ரூபாய்க்காகவது ஆதாரம் காட்டுங்கள்.

கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை தமிழகத்தில் திமுகவுடன் ஆரம்பிக்கும்போது, புதுச்சேரியிலும் தொடங்கும். திமுக அலுவலகத்தில் கூட்டம் நடந்தபோது நான் ஊரில் இல்லை. காங்கிரஸில் பேச்சுவார்த்தைக்கு குழு அமைக்கவில்லை. குழு அமைத்த பிறகு கூட்டணி கட்சிகளுடன் பேசுவோம். 30 தொகுதிகளிகளிலும் கையும், சூரியனும் வெற்றி பெறும்" என்று அவர் கூறினார்.

## "தவறி வந்த ஒரு வார்த்தை" த்ரிஷா குறித்த பேச்சுக்கு நயினார் நாகேந்திரன் வருத்தம்

சென்னை: பிப்.17-

"அன்றைக்கு அது தவறி வந்த ஒரு வார்த்தை. உண்மையில் யாரேனும் இதில் வருத்தப்படுவார்களேயானால், என்னுடைய வருத்தத்தை நான் மனப்பூர்மாக தெரிவித்துக் கொள்கிறேன்" என நடிகை த்ரிஷா குறித்த பேச்சுக்கு தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் மன்னிப்புக் கோரினார்.





இது குறித்து நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய நயினார் நாகேந்திரன், "என்னுடைய அரசியல் வாழ்க்கையில் எந்தவொரு தனிநபர் விமர்சனத்தையும் நான் அனுமதிப்பதில்லை. நானும் அவ்வாறு பேசியதில்லை. அன்றைக்கு அது தவறி வந்த ஒரு வார்த்தை. அது குறித்து எங்கள் கட்சியின் அகில இந்திய மகளிரணி தலைவி வானதி சீனிவாசன் என்னிடம் பேசினார். நேற்று முன்னாள் தலைவர் அண்ணாமலையின் வீட்டுக்குச் சென்றபோது இந்த விவகாரம் குறித்து பேசினார்.

உண்மையில் யாரேனும் இதில் வருத்தப்படுவார்களேயானால், என்னுடைய வருத்தத்தை நான் மனப்பூர்மாக தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்

முன்னதாக இன்று நயினார் நாகேந்திரனின் பேச்சு குறித்து நடிகை த்ரிஷாவின் தரப்பில் வழக்கறிஞர் வெளியிட்ட அறிக்கையில், ' மாநில அரசியலில் உயர் பதவியில் இருக்கும் ஒருவர் இத்தகைய அருவருப்பான மற்றும் பொருத்தமற்ற கருத்தை வெளியிடுவார் என்று எனது கட்சிக்காரர் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

எனது கட்சிக்காரர் எந்த அரசியல் கட்சியுடனும் இணைந்திருக்கவில்லை என்பதையும், அவ்வாறு இருக்கவும் விரும்பவில்லை என்பதையும் மிகத் தெளிவாகக் கூறுகிறார். மேலும், எனது கட்சிக்காரர் கடந்த காலங்களில் இருந்தது போலவே, அரசியலில் எப்போதும் நடுநிலையான நிலைப்பாட்டையே எடுத்துள்ளார்' என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சில நாட்களுக்கு முன்பு விஜய் திரிஷா குறித்து பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியது பெரும் சலசலப்பை உருவாக்கியது குறிப்பிடத்தக்கது.

## "தேர்தல் நெருங்கும் நேரத்தில் டெண்டர்கள், ஏலங்களை அள்ளி வீசும் திமுக அரசு" தினகரன் விமர்சனம்

சென்னை: பிப்.17-

'சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கும் நேரத்தில் டெண்டர்களையும், ஏலங்களையும் அள்ளி வீசும் திமுக அரசு. தேர்தல் செலவுக்காக அரசின் கஜானாவை காலியாக்கத் துடிக்கும் திமுக அரசின் செயல்பாடு கடும் கண்டனத்திற்குரியது' என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் விமர்சித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழகத்தில் சாலை, குடிநீர் குழாய் சீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறை சார்ந்த பணிகளுக்காக கடந்த 15 தினங்களில் மட்டும் சுமார் 5 ஆயிரம் டெண்டர்களும், ஒரே நேரத்தில் 50க்கும் அதிகமான கல்குவாரிகளுக்கு ஏலமும் அவசரகதியில் அறிவிக்கப்பட்டிருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆட்சிக்கு வந்த ஐந்து ஆண்டுகளில் அரசுத் துறை சார்ந்த பணிகளை மேற்கொள்வதிலும், மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்துவதிலும் மெத்தனப் போக்கையே கடைபிடித்து வந்த திமுக அரசு, சட்டப்பேரவைத் தேர்தலுக்கான கால அவகாசம் நெருங்கி வரும் நிலையில், ஒரே நேரத்தில் டெண்டர்களையும், ஏலங்களையும் அள்ளி வீசி அரசு கஜானாவை காலியாக்க முயல்வது கடும் கண்டனத்திற்குரியது.

தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு டெண்டர்களையும், ஏல அறிவிப்புகளையும் வெளியிட்டிருக்கும் திமுக அரசு, சட்டப்பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே அனைத்துவித பணிகளையும் இறுதி செய்ய வேண்டும் என அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்திருப்பதன் மூலம், தேர்தல் செலவுக்காக நிதி ஆதாரங்களை பெருக்கி வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

எனவே, ஆட்சிக்காலத்தின் இறுதி நேரத்தில் கிடைத்தவரை லாபம் என அரசின் கஜானாவை முழுமையாக காலியாக்கத் துடிக்கும் திமுகவுக்கு வரும் சட்டப்பேரவைத் தேர்தலில், இனி எக்காலத்திற்கும் ஆட்சிக்கு வரவே முடியாத அளவிற்கு தமிழக மக்கள் ஒன்றிணைந்து தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி: தமிழகத்தில் பிப்.21ல் 10 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு

சென்னை: பிப்.17-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்கு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு வங்கக்கடலின் மையப்பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகிவுள்ளது.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்கு பகுதிகளில் 18ம் தேதி வாக்கில் மேலும் வலுப்பெறக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளையும் (பிப்.17), நாளை மறுதினமும் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

19ம் தேதி தென் தமிழக கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 20 முதல் 22ம் தேதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கனமழை வாய்ப்பு: 21ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய டெல்டா மாவட்டங்கள் மற்றும் புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களிலும், 22ம் தேதி தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 32 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 22 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோரப் பகுதிகள், குமரிக்கடல் பகுதிகளில் 19, 20 தேதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.






# நவீன அறிவியலின் தந்தை கலிலியோ கலிலியின் பிறந்ததினக் கொண்டாட்டம்

காளையார்கோவில், பிப்.17-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி கீழக்கோட்டையில் நவீன அறிவியலின் தந்தை கலிலியோ கலிலியின் பிறந்த தினக் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவரும் அறிவியல் பட்டதாரி ஆசிரியருமான ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். ஆங்கில பட்டதாரி ஆசிரியர் கீதா முன்னிலை வகித்தார். ஆசிரியை கமலம்பாய் வரவேற்றார். கலிலியோ கலிலியின் வாழ்க்கை வரலாற்று திரைப்படம் திரையிடப்பட்டது. மாணவர்கள் அனைவரும் நவீன அறிவியலின் தந்தை கலிலியோ கலிலியின் முகமூடி அணிந்து அணிவகுத்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி கூறும்போது கலிலியோ கலிலி (15641642) நவீன வானியல் இயற்பியல் மற்றும் அறிவியல் முறைகளின் தந்தை எனப் போற்றப்படும் இத்தாலிய விஞ்ஞானி ஆவார். தொலைநோக்கியை மேம்படுத்தி வியாழனின் நிலவுகள் சூரியப் புள்ளிகள் மற்றும் நிலவின் மலைகளைக் கண்டறிந்து சூரிய மையக் கொள்கையை ஆதரித்தவர் என்று புகழாரம் சூட்டினார். தொலைநோக்கி குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது. ஆசிரியை வாசுகி நன்றி கூறினார்.

# பூண்டி அருகே ஒதப்பையில் சிவராத்திரி மற்றும் மயானகொள்ளை திருவிழா



திருவள்ளூர், பிப்.17-

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி அருகே உள்ள ஒதப்பை கிராமத்தில் மயானகொள்ளை மற்றும் சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது விழாவில் சிவன் மற்றும் பார்வதி திருவுருவங்களை வாகனத்தில் வைத்து மலர்களால் அலங்கரித்து மேளதாளங்கள் முங்க பட்டாசு வான வேடிக்கையுடன் ஊர்வலமாக கொண்டு வந்து மாந்தோப்பு அருகில் உள்ள இடுகாடு மயானத்தில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு திருக்கல்யாணம் நடைபெற்றது

மேலும் இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்டத்திற்கு உட்பட்ட கிராமங்களை சேர்ந்த பக்தர்கள் மற்றும் ஆந்திர மாநிலம் சத்தியவேடு நாகலாபுரம் கிராமங்களில் இருந்தும் பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து இரவு கண் விழித்துச் சென்றனர் மேலும் சிலம்பு மாஸ்டர் ஜெயக்குமார் அவர்கள் தலைமையில் மாணவ மாணவிகள் சிலம்பு மற்றும் மான் கொம்பு தீப்பந்தம் சுற்றுதல் போன்ற சகச நிகழ்ச்சி நிகழ்த்தியது கூடியிருந்த பொது மக்கள் அனைவருக்கும் பெரும் நெகிழ்ச்சியாக பார்க்கப்பட்டது எண்பது குறிப்பிடத்தக்கது.



# திமுகவை கண்டித்து என்.டி.ஏ. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

தேனி, பிப்.17-

தேனி மாவட்டம் பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் சார்பில் கிராம மக்களுக்கான தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை சீர்குலைக்க முயலும் திமுக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அஇ அதிமுக தேனி கிழக்கு மாவட்டம் பெரியகுளம் ஒன்றிய கழக செயலாளர் அன்னபிரகாஷ் , தலைமையில் நடைபெற்ற இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தேனி நகர் கழக செயலாளர் கிருஷ்ணகுமார், மாநில செயற்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி,, பெரியகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜகுரு, பெரியகுளம் நகர் செயலாளர் பழனியப்பன், வடுகபட்டி பேரூர் செயலாளர் பாலமுருகன் தென்கரை பேரூர் செயலாளர் ஆண்டவர் தென்கரைப் பேரூர் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் ஆ முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் திமுக அரசுக்கு எதிராக பல்வேறு கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டன. தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மலைவாழ் மக்களின் நீண்டநாள் கனவு நனவானது: கெலமங்கலம் ஒன்றிய மலைகிராமங்களுக்கு புதிய சாலைப் பணி தொடக்கம், தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்த மக்கள்






கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெட்டமுகிலாளம் ஊராட்சியின் மேலூர், தொலுவபெட்டா மற்றும் குல்லட்டி (கவனூர்) ஆகிய மலைகிராமங்களுக்கு புதிய சாலை வசதி ஏற்படுத்தப்பட்டதை யடுத்து, மலைவாழ் மக்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு நன்றியை தெரிவித்துள்ளனர்.

இந்த மலைப்பகுதிகளில் 653 இருளர் இன மக்கள் வசித்து வருகின்றனர். இதுவரை இப்பகுதிகளில் இருந்த சாலைகள் மிகவும் குண்டும் குழியுமாகவும், மழைக்காலங்களில் சேறும் சகதியுமாகவும் இருந்து, பொதுமக்கள் போக்குவரத்திற்கு கடும் சிரமம் அனுபவித்து வந்தனர். அடர்ந்த வனப்பகுதியாக உள்ளதால் யானை உள்ளிட்ட வனவிலங்குகளின் அபாயத்தையும் எதிர்கொண்டு தினசரி பயணம் மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் கல்விக்காகவும், பொதுமக்கள் மருத்துவ அவசர தேவைகளுக்காகவும் சாலை வசதி அவசியமாக இருந்தது. ஆனால், வனத்துறைக்கு சொந்தமான நிலப்பரப்பில் சாலை அமைக்க வேண்டியிருந்ததால் பணிகள் நீண்டகாலமாக நிலுவையில் இருந்து வந்தன. கிராம சபை கூட்டங்களில் மக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தனர்.

இக்கோரிக்கையை தளி சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன் மற்றும் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் சட்டசபையில் பலமுறை எடுத்துரைத்தனர். தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் 26.04.2025 அன்று தொலுவபெட்டா மற்றும் காவனூர் கிராமங்களை நேரில் பார்வையிட்டு, அரசுக்கு கருத்துரு அனுப்பி நடவடிக்கை எடுக்க உறுதியளித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்பேரில், மேலூர் முதல் தொலுவபெட்டா வரை 4.740 கி.மீ. மற்றும் மேலூர்ரூ தொலுவபெட்டா சாலையிலிருந்து குல்லட்டி (கவனூர்) வரை 5 கி.மீ. தூரத்திற்கு புதிய தார்சாலை அமைக்கும் பணிக்கு ஒசூர் மாவட்ட வனத்துறையின் நிர்வாக அனுமதி கிடைத்தது. இதனைத் தொடர்ந்து, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி 03.02.2026 அன்று பணிகளை தொடங்கி வைத்தார்.

மக்கள் கருத்து:

குல்லட்டி கிராமத்தைச் சேர்ந்த குல்மாதேஷ் தெரிவித்ததாவது: “எங்கள் கிராமத்தில் சுமார் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர். இதுவரை மண்சாலை வழியாகவே தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று வந்தோம். விளைபொருட்களை சந்தைக்கு கொண்டு செல்லவும், மாணவர்கள் பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்லவும் கடும் சிரமம் இருந்தது. தற்போது தார்சாலை அமைக்கப்பட்டிருப்பது எங்களுக்கு மிகப்பெரிய நிவாரணமாகும்,” என்றார்.

அதே கிராமத்தைச் சேர்ந்த



முனிராஜ் கூறுகையில், “கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் முதியவர்கள் அவசர சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு செல்ல முடியாத நிலை இருந்தது. புதிய சாலை அமைப்பால் எங்கள் கிராமத்திற்கு பெரிய உதவியாக அமைந்துள்ளது. எங்கள் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிய முதலமைச்சர், அமைச்சர், மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மலைவாழ் மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரி



வித்துக்கொள்கிறோம்,” என்றார்.

இதன் மூலம், கடைக்கோடி மலைகிராம மக்களுக்கும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரும் அரசின் நடவடிக்கை பாராட்டுக்குரியதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

தொகுப்பு
**சி. மோகன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
கிருஷ்ணகிரி மாவட்டம்

# கைலாசப்பட்டியில் கைலாசநாதர் கோவிலில் மகா சிவராத்திரி திருவிழா



பெரியகுளம் பிப்.17-

தேனி மாவட்டம் பெரியகுளம் கைலாசபட்டி அருகில் உள்ள கைலாசநாதர் மலைக்கோயிலில் மாலை 6.00 மணி முதல் அதிகாலை 5.30 மணிவரை மகாசிவராத்திரி நான்கு கால பூஜை வழிபாடு நடைபெற்றது. முதல் கால பூஜை இரவு10 மணி இரண்டாம் கால பூஜை இரவு 12 மணி மூன்றாம் கால பூஜை இரவு 2மணி நான்காம் கால பூஜை பிரம்ம முகூர்த்தம் பூஜை 4 நான்கு மணியளவில் துவங்கி அதிகாலை 5.30 மணி வரை நடைபெற்றது. முதல் காலம் சிறப்பு அபிஷேகம் பூஜையில் முன்னால் முதல் அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தரிசனம் செய்து வழிபட்டார் மகாசிவராத்திரி இந்த இனிய சிவராத்திரியில், விடிய, விடிய, கூட்டு வழிபாட்டுடன் தேவாரம், திருவாசகம், கூட்டு வழிபாட்டுடன் பாடி இறைவனை போற்றி பக்தர்கள் வழிபட்டார்கள் உலக நன்மைக்காகவும் சிறப்பு வழிபாடும் நடைபெற்றது ஆயிரத்திற்கும் மேலான பக்தர்கள் கலந்து கொண்டனர். மாலை 6 மணியளவில் அன்னதானத்தையும், ஒவ்வொரு கால பூஜைகள் முடிந்தவுடன் அன்ன பிரசாதத்தையும் தேனி அரசு ஒப்பந்தகாரர் வி.வீரராஜ் தாமாரை குளம் முன்னால் சேர்மன் வி.ராம தண்டபாணியும் வழங்கினார்கள் குழுவின் சார்பாக ஐந்து முகம் ருத்ராட்சம் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை அன்பர் பணி செய்யும் பராமரிப்பு குழுவினர்கள் செய்திருந்தனர்.



# நாகர்கோவில் மாநகராட்சி 3வது வார்டில் குடிநீர் விநியோக தாமதம் - வேலைக்கு செல்லும் பெண்கள் அவதி

நாகர்கோவில் பிப்.17-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 3வது வார்டு பகுதிகளில் வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கு வழங்கப்படும் குடிநீர் தொடர்ந்து தாமதமாக திறக்கப்படுவதால் பொதுமக்கள், குறிப்பாக வேலைக்கு செல்லும் பெண்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

முன்னதாக காலை 6.00 மணிக்கு திறக்கப்பட்டு வந்த குடிநீர் விநியோகம்தற்போது காலை 7.30 மணிக்கே தொடங்கப்படுகிறது. மேலும் காலை 9.30 மணிக்கே நிறுத்தப்படுவதால் குடிநீர் சேகரிக்க பொதுமக்கள் அவசரப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

காலை நேரத்தில் அலுவலகம், தொழிற்சாலை உள்ளிட்ட பணிகளுக்கு செல்ல வேண்டிய பெண்கள் தங்கள் வீட்டு வேலைகளையும், குடிநீர் சேகரிப்பையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள வேண்டியதால் பெரும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

குடிநீர் விநியோகத்தில் ஏற்படும் இந்த தாமதம் ஆபரேட்டரின் பணி பொறுப்பின்மை காரணம் என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

உடனடி நடவடிக்கை எடுத்து முன்புபோல் நேரத்திற்கு குடிநீர் வழங்க மாநகராட்சி அதிகாரிகள் முன்வர வேண்டுமென மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இரண்டு தினங்களுக்கு ஒரு முறை வரும் தண்ணீரையும் குறிப்பிட்ட நேரத்திற்கு வழங்காமலும் சீக்கிரமாகவே நிறுத்தி செல்லும் ஆப்பரேட்டரை கண்டுகொள்ளாத மாநகராட்சி அதிகாரிகள் மீது பொதுமக்கள் அதிருப்தி.

# திருவள்ளூரில் பாஜக கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட அமைப்பு சாரா தொழில் பிரிவு சார்பில் நிர்வாகிகள் பயிலரங்கம்




திருவள்ளூர், பிப்.17-

பாரதிய ஜனதா கட்சி சார்பில் திருவள்ளூர் மேற்கு கிழக்கு மாவட்ட அமைப்புசாரா தொழில் பிரிவு சார்பில் பயிலரங்க கூட்டம் 15.02.2026 அன்று காலை 10.30 மணியளவில் திருவள்ளூர் மனவாள நகரில் அமைந்துள்ள மாவட்ட தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு அமைப்சாரா தொழில் பிரிவு மாவட்ட தலைவர் P.பாண்டுரங்கன் தலைமை தாங்கினார் மேற்குமாட்ட தலைவர் அஸ்வின்குமார் (எ) ராஜசிம்ம மகேந்திரன் மாவட்ட துணைத்தலைவர் K.ஜெய்கனேஷ் முன்னிலை வகித்தனர்.

மேலும் இக்கூட்டத்தை கிழக்குமாவட்ட தலைவர் ஸி.சரவணக்குமார் சிறப்பு ஏற்பாடுகளை செய்திருந்தார் சிறப்பு அழைப்பாளர்களாக அமைப்புசாரா தொழில் பிரிவு மாநில தலைவர் G.ராதாகிருஷ்ணன் மாநில செயலாளர் ரௌவுத்திரஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பயிற்ச்சி அளித்தனர் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அமைப்புசாரா தொழில் பிரிவு மேற்கு மற்றும் கிழக்கு மாவட்ட நிர்வாகிகளுக்கு மாவட்ட இணை அமைப்பாளர்கள் D.சிரஞ்சிவி மற்றும் சுதாகர்,சுரேஷ் நன்றி தெரிவித்தனர்



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சார்பில் நடைபெறவுள்ள தொகுதி 1 தேர்விற்கான இலவசப் பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்தார்கள். உடன் கோயம்புத்தூர், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) ஆ.ஜோதிமணி, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் சுரேஷ் ஆகியோர் உள்ளனர்.



■ தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சுப்புராஜ் நகர் புதுக் காலனி 3வது தெரு PKSA Friends & KOLARU GANG இணைந்து நடத்தும் முதலாம் ஆண்டு மாபெரும் கபடி போட்டி காலை 8 முதல் நடைபெற்று வருகிறது. இந்நிகழ்ச்சியின் தலைமை மனோஜ்குமார் ராஜவேல் தேனி தெற்கு மாவட்ட இளைஞரணி பொதுச்செயலாளர் அகில இந்திய ஃபார்வார்டு பிளாக் மற்றும் இந்நிகழ்ச்சியின் முன்னிலை கார்த்திக் தேனி மாவட்ட விவசாய அணி செயலாளர் மற்றும் விவேக் 10வது வார்டு திமுக இளைஞரணி அமைப்பாளர் ஆகியோர்கள் விளையாட்டு போட்டியை துவக்கி வைத்தனர்.நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை யோகேஸ்வரன் தலைவர் பிரித்தீஸ் செயலாளர் அசோக்குமார் பொருளாளர் ஆகியோர்கள் நிகழ்ச்சியினை சிறப்பாக நடத்தினர்.இப்போட்டியனை பாதுகாப்புடன்நடத்த அனுமதி வழங்கிய போடி நகர் காவல் நிலைய அதிகாரிகளுக்கு PKSA friends & KOLARU GANG தங்களது நன்றியினை தெரிவித்தனர்.



■ தமிழ்நாடு முதல்வர் ஆணைக்கிணங்க, நீலகிரி மாவட்டம் உதகை மத்திய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகதின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் 16 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு அவர்கள் உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (கோவை) லிட். உதகை மண்டலத்தின் பொது மேலாளர் ஜெய்சங்கர் மற்றும் நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே எம் ராஜு உட்பட கழக நிர்வாகிகள், தொமுச நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



## கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றியத்தில் அதிமுக சாதனைகள் விளக்கும் திண்ணை பிரச்சாரம், அசோக்குமார் எம் எல் ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி, பிப்.17-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், மோரமடுகு கிராமத்தில் மேற்கு ஒன்றிய அதிமுக சார்பில் திண்ணை பிரச்சார நிகழ்ச்சி உற்சாகமாக நடைபெற்றது. மேற்கு ஒன்றிய செயலாளர் சோக்காடி ராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மாதையன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அசோக்குமார் எம்.எல்.ஏ சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். அவர் கட்சியின் சாதனைகள் குறித்த பிரச்சார நோட்டீஸ்களை பொதுமக்களிடம் வழங்கி, அதிமுக ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார்.

சாலை வசதி மேம்பாடு, குடிநீர் திட்டங்கள், கல்வி வளர்ச்சி முயற்சிகள் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் உள்ளிட்ட பல சாதனைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். தொடர்ந்து, கட்சியின் சாதனைகளை விளக்கும் துண்டுப் பிரசுரங்களும் பொதுமக்களிடம் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் சூர்யா,அதிமுக பிரமுகர் நவாப்,

முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மகேந்திரன், சென்னையன், மாவட்ட ஓட்டுனர் அணி தலைவர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முனிராஜ், தனகோடி, யுவராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வரதராஜ், மாது, கொடிலா, ராமலிங்கம், அசோகன், வெங்கடேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

இந்த திண்ணை பிரச்சாரம் மூலம் பொதுமக்களுடன் நேரடி தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துகள் மற்றும் கோரிக்கைகள் கேட்கப்பட்டன. வரவிருக்கும் தேர்தலை முன்னிட்டு கட்சியின் அடிப்படை வாக்காளர்களை ஒருங்கிணைக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றதாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.



■ சிவகங்கை மாவட்டம் கீழடி திறந்த வெளி அருங்காட்சியகத்தை உலக சதுரங்க சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் குடும்பத்துடன் பார்வையிட்டார். 24.30 கோடியில் அமைக்கப்பட்ட இத்தளத்தில் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட உறை கிணறு, செங்கல் கட்டிடப் பாகங்கள் உள்ளிட்ட பழமையான பொருட்களை பார்வையிட்டு, "மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது" என பாராட்டினார்.



## செங்கல்பட்டு மாவட்டம்மாடம்பாக்கம் வியாபாரிகள் நல சங்கம் ஆலோசனை கூட்டம்

தாம்பரம் பிப்.17-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த மாடம்பாக்கம் வியாபாரிகள் நல சங்கம் சார்பில் ஆலோசனை கூட்டம் வியாபாரிகள் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

சங்க தலைவர் என்.சி. செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், செயலாளர் வின்சென்ட் மற்றும் பொருளாளர் தேவராஜ் ஆகியோர் முன்னிலையில் சங்க உறுப்பினர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் தொடக்கத்தில் கடந்த ஆண்டிற்கான வரவு செலவு கணக்குகள் விரிவாக விளக்கமாக வாசிக்கப்பட்டு, உறுப்பினர்களின் கருத்துகள் கேட்கப்பட்டன. சங்கத்தின் நிதி நிலை, எதிர்கால திட்டங்கள், புதிய உறுப்பினர் சேர்க்கை, தொழில் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் அரசு தொடர்பான அறிவிப்புகள் குறித்து விரிவான ஆலோசனைகள் நடைபெற்றன.

மேலும், ஆண்டு வரவுசெலவு கணக்கு மற்றும் சங்க நிர்வாகிகள் பற்றிய முழு விவரங்களைக் கொண்ட புத்தகம் மற்றும் அதிகாரப்பூர்வ நோட்டீஸ் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த முயற்சி சங்கத்தின் வெளிப்படைத்தன்மையை வலியுறுத்துவதாக உறுப்பினர்கள் பாராட்டினர்.

சங்க வளர்ச்சிக்காக ஒருமித்தமாக செயல்பட வேண்டும் என தலைவர் என்.சி. செல்வகுமார் வலியுறுத்தினார். செயலாளர் வின்சென்ட், வரவிருக்கும் நிகழ்ச்சிகள் மற்றும் சிறப்பு முகாம்கள் குறித்து அறிவிப்பு வெளியிட்டார்.

கூட்டத்தின் நிறைவில் உறுப்பினர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டு, நட்புறவு சூழலில் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.



■ பெரம்பலூர் மாவட்டம் குன்னம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட லப்பைக்குடிகாட்டில் கர்ப்பிணி பெண்களுக்கு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் கலந்துகொண்டு கர்ப்பிணிப் பெண்களுக்கு சீர்வரிசை வழங்கிய போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர். அதுசமயம் மாவட்ட ஆட்சித் தலைவர் மிருணாளினி, அரசு அலுவலர்கள், பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் ஜெகதீசன் உள்ளிட்ட திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## இளைய சமுதாயத்தினரின் முன்னேற்றம்,வளர்ச்சியே தனது வாழ்க்கையின் லட்சியம் முன்னாள் மாவட்ட பதிவாளர் S.பாலு

ராமநாதபுரம், பிப்.17-

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகேயுள்ள முத்துவயல் கிராமத்தை சேர்ந்த சுப்பிரமணி மகன் பாலு. இவர் வழக்கறிஞர் கல்வி பயின்றதுடன் அரசுத் துறையில் சார் பதிவாளராக பணியாற்றி பின்பு மாவட்ட பதிவாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் தனது வாழ்நாளில் இளைஞர்களின் நலனிலும் ஏழை எளியோர்களின் நலனிலும் அக்கறை கொண்டு அவர்களை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்லும் வகையிலும் எதை கொடுத்தாலும் ஈடு செய்ய முடியாத கல்வியை சுபம் இலவச வேலை வாய்ப்பு பயிற்சி மையத்தின் மூலம் கொடுத்து வருகிறார். இதன்மூலம் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஏராளமான இளைஞர்களை அரசு உயர் அதிகாரிகளாக மாற்றி பெருமை சேர்த்துள்ளார்.

தொடர்ந்து ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் இளைஞர்களின் எழுச்சி, முன்னேற்றத்திற்காக சுபம் வேலை வாய்ப்பு பயிற்சி மையத்தை தமிழ்நாடு முழுவதும் தொடங்கி இளைஞர்களையும், ஏழை எளிய மக்களையும் ஏழ்மை நிலையில் படிக்க முடியாமல் தவிக்கும் மாணவ மாணவிகளையும் வளர்ச்சியின் பாதையை நோக்கி கொண்டு செல்வதே தனது வாழ்நாளின் லட்சியம் என உறுதியாக செயல்பட்டு வருகிறார்.



இந்நிலையின் தான்(பாலு)அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்பு அரசியலில் களம் இறங்கினார்.

அ.தி.மு.க. ராமநாதபுரம் மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற தலைவராக செயல்பட்டு வருகிறார்.

அரசியலில் சிறப்பாக செயல்பட்டு வரும் பாலு அரசியல் பணி மட்டுமல்லாது பல்வேறு சமூக சேவைகளில் ஈடுபட்டு வருவது அனைத்து சமுதாய மக்கள் மற்றும் இளைய சமுதாயத்தினரிடையே நல்லெண்ணத்தை பெற்றுள்ளார். மேலும் பரமக்குடி பகுதியில் விவசாயிகள், மகளிர்கள், வியாபாரிகள் உள்பட

அனைத்து தரப்பு மக்கள் மற்றும் இளைஞர் சமுதாயத்தினரிடம் அன்புடன் பழகி வரும் பாலு வரும் தமிழக சட்டமன்ற தேர்தலில் பரமக்குடி தொகுதியில் களம் இறங்கி வெற்றி பெற்று தொகுதியை முன்னேற்ற பாதையில் கொண்டு சென்று வளமாக்குவது எனது லட்சியம் என செயல்பட்டு வருகிறார்.

மேலும் இளைஞர்களின் எதிர்காலமும் ஏழை எளியவர்கள் எதிர்காலமும் சிறப்பாக இருக்கும் எனவும் தனது இலவச கல்வி மையத்தின் மூலம் தமிழகத்தில் உள்ள இளைஞர்களின் எதிர்காலத்தை மாற்றி பல துறைகளில் உயர் அதிகாரிகளாக, கண்ணியமானவர்களாக மாற்றும் வல்லமை கொண்டவர் எனவும் இவரைப் போன்றோர் வெற்றி பெற்று சட்டமன்றம் சென்றால் இந்த மாவட்டம் சிறப்பாக உருவாகும் என்பது அனைத்து தரப்பு மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## தேனியில் நமது மக்கள் முன்னேற்ற கழகத்தின் சார்பில்அரசியல் அதிகார உரிமை மீட்பு மாநாடு

தேனி பிப்.17-

தேனியில் நமது மக்கள் முன்னேற்ற கழகத்தின் சார்பில்அரசியல் அதிகார உரிமை மீட்பு மாநாடு நடைபெற்றது.இந்த மாநாடை முன்னிட்டு தேனி நகர் முழுவதும் நிறுவனத் தலைவர் ஜெகநாத் மிஸ்ராவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது இந்த சந்திப்பில் நமது மக்கள் முன்னேற்றக் கழகம் இடம்பெறும் கூட்டணிக்குதான் மாபெரும் வெற்றிக் கூட்டணியாக வருகின்ற தேர்தலில் அமையும் , எங்களுக்கு மரியாதை அளிக்கக்கூடிய கட்சியுடன் நாங்கள் பேசிக்கொண்டிருக்கின்றோம். நிச்சயமாக எங்களுடைய கட்சியின் மரியாதைக்கு உரிய சீட்டுகள் வழங்கக்கூடிய கட்சியுடன் கூட்டணி அமைப்போம். த.வெ.க விஜய் வந்து "ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும்



பங்கு" என்கிறார். அதை வரவேற்கிறோம். எங்களுடைய கொள்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். எங்களுடைய பிரதான கொள்கைகளாக நாங்கள் வைத்திருக்கின்ற தூய நீர், தூய காற்று, தூய மண் வளம், விவசாயிகளுக்கான விலை நிர்ணயம் போன்ற கொள்கைகளை வைத்திருக்கும் நிலையில் அந்த கொள்கைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்சியுடன் கூட்டணி அமைப்போம். கூட்டணி பேச்சுவார்த்தையில் எல்லா கட்சியிலும் கூட்டணி கூறித்து பேசி வரும் நிலையில் எங்களின் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் கட்சியுடன் கூட்டணி அமைப்போம் வேண்டும். எல்லா கட்சியுமே எங்களுக்கு நண்பர்கள் தான். அனைத்து கட்சியுமே நண்பர்கள் தான். "நமது மக்கள் முன்னேற்றக் கழகம்" வரணும்னு சொல்லி அனைத்து கட்சியுமே விரும்பும் நிலையில் எங்களுடைய உயரத்துக்கு தகுந்த மாதிரி நாங்க சீட்டுகளை கேட்கிறோம். நிச்சயமாக எங்களுடைய தகுதியின் அடிப்படையில் சீட்டுகள் வழங்குவார்கள் என்று நம்புறோம். தற்பொழுது வந்த பட்ஜெட்டை பொறுத்தவரைக்கும் பற்றாக்குறை பட்ஜெட்டாக போடக்கூடாது. வருவாய் பட்ஜெட்டாக இருக்க வேண்டும். மாநில அரசாக இருந்தாலும், மத்திய அரசாக இருந்தாலும் நம்முடைய தேசத்திற்கு வருவாயை கூட்டக்கூடிய பட்ஜெட்டாக அமைய வேண்டும் என்பதுதான் எங்கள் கட்சியின் கொள்கை. ஏற்றுமதிக்கான திட்டங்களை வகுக்கணும். கல்வியிலே ஏற்றுமதி கல்வியை கொண்டு வரணும். விவசாய கல்வியை ஊக்குவிக்கணும். இந்தியாவைப் பொறுத்தவரைக்கும் விவசாயமும், வியாபாரமும் சேர்ந்ததுதான் இந்தியா. இதற்கான பட்ஜெட்டாக அமைய வேண்டும்,நாட்டு மக்களுக்கு என்ன தேவை என்பதைச் சொல்வதுதான் எங்கள் கொள்கை. கோரிக்கையின் அடிப்படையில் தமிழக முதல்வரை சந்தித்தோம். கண்ணகி கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்த வேண்டும், கம்பத்தில் 25 ஆண்டுகளாக வைக்கப்படாமல் உள்ள வ.உ.சி சிலையை வைக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தோம். முதலமைச்சர் பரிசீலிப்பதாகக் கூறியுள்ளார் என்று கூறினார்.

# மாற்றுத்திறனாளிகளுக்கான ‘விழுதுகள்’ ஒருங்கிணைந்த சேவை மையம் திறப்பு : கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.17.40 லட்சம் மதிப்பில் புதிய கட்டிடம், மதியழகன் எம்எல்ஏ பங்கேற்பு



கிருஷ்ணகிரி, பிப்.17-

தமிழ்நாடு அரசு சார்பில், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் கீழ் ரூ.17.40 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள ‘விழுதுகள்’ ஒருங்கிணைந்த சேவை மையக் கட்டிடம், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி, மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் காணொளி காட்சி வாயிலாக நடைபெற்றது. தொடர்ந்து, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே. மதியழகன் அவர்கள் மருத்துவமனை வளாகத்தில் குத்து விளக்கேற்றி மையத்தை திறந்து வைத்தார்.

புதியதாக தொடங்கப்பட்டுள்ள இந்த ‘விழுதுகள்’ ஒருங்கிணைந்த சேவை மையத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான பல்வேறு சேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்பட உள்ளன. மருத்துவ ஆலோசனை, மறுவாழ்வு சேவைகள், உதவி சாதனங்கள் வழங்கல், தொழில் பயிற்சி மற்றும் அரசு நலத்திட்டங்கள் தொடர்பான வழிகாட்டுதல் உள்ளிட்ட சேவைகள் இம்மையத்தின் மூலம் கிடைக்கவுள்ளன. இதன் மூலம் மாவட்டத்திலுள்ள மாற்றுத்திறனாளிகள் நேரடி பயன் பெறுவார்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் (பயிற்சி) கிரீத்தி காம்னா, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், மாற்றுத்திறனாளிகள் துறை முட நீக்கு வல்லுனர் பிரகாஷ், அரசு மருத்துவர்கள் செல்வராஜ், மது, ராஜா, கிருபாவதி, கவிதா, கிருஷ்ணகிரி நகராட்சி தலைவர் (பொ) சாவித்திரி கடலரசு மூர்த்தி, திமுக நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் அன்பரசு, ஒன்றிய செயலாளர் மகேந்திரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த மையத்தின் தொடக்கத்தால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான சேவைகள் மேலும் விரிவடைந்து, அவர்கள் வாழ்க்கைத் தரம் மேம்படும் என்று நிகழ்ச்சியில் பேசுபவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.



# காவேரிப்பட்டணத்தில் ஓபிஎஸ் அணி சார்பில் அன்னதானம்

கிருஷ்ணகிரி, பிப்.17-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தில் உலகப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ அங்கால அம்மான் தேர் திருவிழாவை முன்னிட்டு அன்னதானம் மற்றும் நீர்மோர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் சின்னசாமி தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஓபிஎஸ் அணி சார்பில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை மாவட்ட செயலாளரும் முன்னாள் சட்டமன்ற சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தராஜ் கலந்து கொண்டு அண்ணாதுரை நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் வழக்கறிஞர் ராதா கார்த்திக், பொது குழு உறுப்பினர் லோகாபிராமன், மாவட்ட எம் ஜி ஆர் மன்ற இணை செயலாளர் ராமசாமி,ஒன்றிய விவசாய பிரிவு செயலாளர் செல்வராஜ், மாவட்ட பிரதிநிதி ஜெயராமன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாவட்ட செயலாளர் கணேசன், இளைஞர் அணி மாவட்ட துணை செயலாளர் அரவிந்தன், தொகுதி செயலாளர் சரவணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் பாக்யராஜ் முன்னாள் பேரூராட்சி உறுப்பினர் சாந்தகுமார், மாரியப்பன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




# தாம்பரம் மாநகர பெருங்களத்தூரில் திமுக கழகத் தலைவர் பிறந்தநாள் விழா மாற்றுக் கட்சியிலிருந்து பலர் இணைப்பு

தாம்பரம் பிப்.17-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பெருங்களத்தூர் வடக்கு பகுதி மற்றும் 33வது வார்டு இணைந்து திமுக கழகத் தலைவர் பிறந்தநாள் விழா 4வது மண்டல குழுத் தலைவர் மற்றும் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் அவர்களின் தலைமையில் வட்ட செயலாளர் எம்.வினோத் அவர்களின் ஏற்பாட்டில் மிக சிறப்பாக நடைபெற்றது..

இந்த விழாவிற்கு முன்னதாக, மாற்றுக் கட்சிகளான அ.மு.மு.க மற்றும் பா.ம.க ஆகிய கட்சிகளில் இருந்த பலர் விலகி தாய் கழகத்தில் இணைந்தனர்.

இதனைத் தொடர்ந்து, தாம்பரம் மாநகர செயலாளர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் சிறப்புரையாற்றினார். கழகத்தின் வளர்ச்சி, மக்கள் சேவை மற்றும் ஒற்றுமையின் அவசியம் குறித்து அவர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி வசந்தகுமாரி, 5வது மண்டல குழுத் தலைவர் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

மேலும், பகுதி கழக துணை செயலாளர் தலைமை கழக பேச்சாளர் வேல்மணி, மாமன்ற உறுப்பினர் சி.சுரேஷ், எல்.பெரியநாயகம், ரமணி ஆதிமூலம் மாவட்ட நிர்வாகிகள், மாநகர நிர்வாகிகள் மற்றும் பகுதி நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாணவர் அணி, இளைஞர் அணி, மகளிர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இறுதியில் அனைத்து பொது மக்களுக்கு சில்வர் பாத்திரங்களை நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தனர்.



■ நீலகிரி மாவட்டம் குன்னூர் விநாயகர் திருக்கோவிலில், மகா சிவராத்திரி தினத்தினை முன்னிட்டு, சிவபெருமானுக்கு அபிஷேகம், மற்றும் நான்கு கால சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இந்த மகா சிவராத்திரி சிறப்பு பூஜையில் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சிவபெருமானின் தரிசனம் பெற்றனர். பக்தர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டன.



■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஸ்ரீ அங்காளம்மன் பூங்காவனத்தம்மன் மகா சிவராத்திரி திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ தனலட்சுமி கல்வி அறக்கட்டளை சார்பில் சின்னசாமி தலைமையில் மாபெரும் அன்னதானம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அதிமுக இளைஞர் நலன் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே பி எம் சதீஷ்குமார் கலந்துகொண்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினார். நிகழ்ச்சியில் செயலாளர் பையூர் ரவி, நகர செயலாளர் விமல்,மாவட்ட விவசாய அணி செயலாளர் மோகன்,ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் கேசவன் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தொகுதி, லப்பைக்குடிகாடு பேரூராட்சி ஜமாலியா நகர் பொதுமக்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இலழச பட்டாக்களை வழங்கி வருகிறோம். இந்நிலையில் முதற்கட்டமாக 2025 பிப்ரவரி மாதத்தில் 108 பேருக்கும், இரண்டாம் கட்டமாக 2025 ஜூலை மாதத்தில் 310 பேருக்கும் பட்டா வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, இன்று மூன்றாம் கட்டமாக 277 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். இதுவரை மொத்தம் 695 குடும்பங்களுக்குப் பட்டா வழங்கப்பட்டு, மக்கள் நீண்ட நாள் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தொகுதி,லப்பைக்குடிகாடு பேரூராட்சி, ஜமாலியா நகரைச் சேர்ந்த இளைஞர்களின் கோரிக்கையை ஏற்று, அமைச்சர் சிவசங்கர் அறக்கட்டளை சார்பில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடலை போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மிருணாளினி, முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர், அரசு அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# குன்னூர் டேன்டீ தலைமை அலுவலகத்தில் ஓய்வு பெற்ற தோட்ட தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பணிக்கொடை வழங்கும் விழா




நீலகிரி, பிப்.17-

நீலகிரி மாவட்டம், குன்னூர் டேன்டீ தலைமை அலுவலகத்தில், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகத்தில் நடைபெற்ற ஓய்வு பெற்ற டான்டீ தோட்ட தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பணிக்கொடை மற்றும் விடுப்புடன் கூடிய ஊதியம் வழங்கும் விழாவில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா அரசு தலைமைக்கொறடா .கா.ராமச்சந்திரன் முன்னிலையில் ரூ.35.42 கோடி மதிப்பில் பணிக்கொடை மற்றும் விடுப்பு ஊதிய தொகையினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது: முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் , இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கும், ஏனைய தமிழர்களுக்கும் மறுவாழ்வு அளிக்கும் நோக்கில் தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழகம் கடந்த 1968 ஆம் ஆண்டு அரசு தேயிலைத் திட்டமாக உருவாக்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வந்தது. ஏப்ரல் 2022 ஆம் ஆண்டு முதல் ஊழியர்களுக்கான பணப்பலன்கள் வழங்கப்படவில்லை என்று தொழிற்சங்க தலைவர்கள் என்னிடம் கோரிக்கை வைத்ததை தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கடந்த ஏப்ரல் 2022 முதல் வழங்கப்பட ஓய்வுக்கால பணப்பலன்களான பணிக்கொடை மற்றும் விடுப்பு ஊதியம் பெறும் வகையில் 817 தொழிலாளர்கள், 74 ஓய்வு பெற்ற பணியாளர்கள், 3,668 தொழிலாளர்களுக்கு நிலுவையில் உள்ள விடுப்பு ஊதிய தொகை, 1353 தொழிலாளர்களுக்கு மருத்துவ விடுப்பு ஊதியத்தொகை என மொத்தம் ரூ.35.42 கோடியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி உள்ளார்கள். அதனை இன்றைய தினம் தொழிலாளர்களுக்கு வழங்கி உள்ளோம். டேன்டீ நிறுவனம் இலாபம் ஈட்ட வேண்டும் என விரும்புகிறேன். அதற்கான திட்ட அறிக்கைகளை கூர்ந்து ஆராய்ந்து தரவேண்டும் என நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

முன்னதாக, நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அரசு தலைமை கொறடா முன்னிலையில், தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழகத்தில் (டேன்டீ) பழச்சுவை, நறுமண சுவை, ஆரோக்கியம் என 3 புதிய ரக தேயிலை தூள்களை அறிமுகப்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், டேன்டீ மேலாண்மை இயக்குநர் பி.ஜி அருண்லால் டேன்டீ பொது மேலாளர் தீர்த்தப்பள்ளி தருண்குமார் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், தொழில் நுட்ப ஆலோசகர் (சட்டங்கள்) கண்ணன், நிர்வாக செயலாளர் சிவாநந்தன், நிர்வாக அலுவலர் சீதாலட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருத்தணியில் 2026 சட்டமன்ற தேர்தல் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ராசா தலைமையில் நடைபெற்றது

## இவரது முன்னிலையில் நாம் தமிழர் கட்சியைச் சார்ந்த 15 பேர் மாநில நிர்வாகிகள் ஆகியோர்கள் திமுகவில் இணைந்தனர்

திருத்தணி பிப்.17-

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் திருத்தணி அருகில் உள்ள மூன்று நட்சத்திர தனியார் சொகுசு விடுதியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் எஸ். சந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்த கூட்டத்தில் திருத்தணி சட்டமன்ற தொகுதியில் உள்ள முக்கிய நிர்வாகிகள் அனைவரும் 300 மேற்பட்டோர் கலந்து கொண்டனர் .

இந்நிகழ்ச்சிக்கு நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர்





, திருவள்ளூர் மேற்கு மாவட்ட சட்டமன்ற 2026_ தேர்தல் பொறுப்பாளர் ராசா தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது இதனை தொடர்ந்து நிர்வாகிகள் முன்னிலையில் பேசியவர் ஒற்றுமையுடன் அனைவரும் கட்சி பணியாற்ற வேண்டும் யாருக்கு கட்சி 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான சீட்டு வழங்குகிறதோ அவர்களுக்கு உண்மையாக அனைவரும் உழைக்க வேண்டும் இந்த தேர்தலில் அனைவரும் மன கசப்புகளை மறந்து உங்களுக்குள்ளிருக்கும் வேற்றுமைகளை மறந்து கட்சிக்காக பாடுபட்டு உழைக்க வேண்டும் நம் கட்சி அறிவிக்கின்ற வேட்பாளர் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று பேசினார்.

இதனைத் தொடர்ந்து திமுக நிர்வாகிகள் இடத்தில் தனித்தனியாக சந்தித்து அவர்கள் தொடர்புடைய புகார்களை விசாரணை செய்தார்.

இதனைத் தொடர்ந்து நாம் தமிழர் கட்சியை சேர்ந்த மாநில நிர்வாகி மற்றும் கட்சியை சேர்ந்த பதினைந்து பேர் அந்த கட்சியில் இருந்து விலகி திமுகவில் இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் ராசா முன்னிலையில் இணைந்தனர் அவர்களுக்கு சால்வை அணிவித்து அனைவரையும் வரவேற்றார்.

இந்த நிகழ்வின் போது திமுகவை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் அனைவரும் உடன் இருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161